**MC. 5/2025,** **நாள்: 14.08.2026**

**PW.1**

பெயர் : சாய்சித்தார்த் த.பெ. பழனியப்பன்

**சாட்சி நீதிமன்ற அனுமதியின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

19.02.2024 முதல் 27.03.2024 வரை Bharati Fertility Center-ல் எனக்கும் மனுதாரருக்கும் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை குறித்த ஆவணங்கள் அடங்கிய அசல் கோப்பை தாக்கல் செய்கிறேன் (15 - Papers). அது எ.ம.த.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும் மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தபோது மனுதாரருக்கான சிகிச்சை செலவை நான் தான் செய்தேன் என்றால் சரிதான். என்னை விட்டு பிரிந்து சென்ற போது அவரது தாய் வீட்டிற்கு தான் சென்றார். தற்போது அவர் தனியாக வசிக்கிறாரா என்றும் எனக்கு தெரியாது. ஜனவரி 2025 வரை மனுதாரர் பெருங்களத்தூரில் வைத்திருந்த பல் மருத்துவமனையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அந்த வாடகை கட்டிடத்திலிருந்து பல் மருத்துவமனையின் உபகரணங்களை அதே மாதத்தில் மனுதாரர் எடுத்து சென்று தற்போது நத்தப்பேட்டை காஞ்சிபுரத்தில் MR Dental Clinic என்ற பெயரில் நடத்தி வருகிறார். நத்தப்பேட்டையில் கிளினிக் தொடங்குவதற்கு முன்பு வரை என் மனைவிக்கு வருமானம் எதுவும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்து கணவன் இந்து மனைவிக்கு மனைவியின் வாழ்நாள் வரையிலோ அல்லது அவர் வேறு திருமணம் செய்து கொள்ளும் வரையிலோ ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். மனுதாரர் என் மனைவி என்ற முறையில் நான் அவரை பராமரித்து ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 14.08.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

Typewritten in my dictation in open court read by the witness in the presence of his counsel and admitted by the witness to be correct and signed in my presence.

Sd/- S. Mohanambal,
Chief Judicial Magistrate
Kancheepuram.